

## ஆசிரியர் மடல்

# இயேசுவே மெய்யான ஒளி

அன்பான வாசகர்களுக்கு , இறை மக்களுக்கு,

இரட்சகரும் மீட்பரும் வரப்போகிற இராஜாதி இராஜாவுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

பள்ளிகள்,கல்லூரிகள் துவங்கும் மாதம்.பெற்றோர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன், எதிர்கால கனவுகளுடன் தங்கள் பிள்ளைகளை, நம் எதிர்கால வாழ்க்கை பாதுகாப்பாகவும், சிறப்பாகவும் இருக்கும் என அவர்கள் மேல் தங்கள் நம்பிக்கையை வைத்து, இதுநாள் வரை தன் இரு கைகளால் சேர்த்த ஆஸ்தியின் ஒரு பங்கை அங்கே விதைக்கிறார்கள்.இல்லாத பட்சத்தில்,ஒரு கையால் கடன் வாங்கி தங்கள் கடமையை செயலாற்றுகிறார்கள்.இரு ‘ கை ’ யோ, ஒரு ‘ கை ’யோ அது அல்ல, உங்கள் **இருக்கைகளை** உங்கள் பிள்ளைகளுக்காக தேவ சமூகத்தில், தேவனுக்கு முன்பாக வைத்து அவரை நோக்கிப் பாருங்கள். **இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்** (சங் 127 : 4). **உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள். உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்** ( ஏசாயா 54 : 13 ), உங்கள் பெலன், ஞானம், அறிவு, அனுபவம் கொஞ்சம் உதவலாம். ஆனால் அதுவே முழு வெற்றியைத் தந்துவிடும் என்று நினைத்து சோடை போகி விடாதீர்கள். இந்த கல்வி ஆண்டு நம் பிள்ளைகளுக்கு மிகுந்த ஆசீர்வாதமான ஆண்டாக அமையட்டும் .

**திருவண்ணாமலை** மாவட்டம் ‘**திருமணி** ’என்ற கிராமத்தில் உள்ள **மெய்யான ஒளி திருச்சபையின்** கிளை சபை புதுப்பித்துக் கட்ட வேண்டிய ஒரு கட்டாய நிலை. செங்கல் மணல் இறக்கி வைத்துள்ளோம்.வாங்க 17,000/= (பதினேழாயிரம்) தேவைப்படுகிறது.உதவி செய்ய முன்வருகிறவர்களை எதிர்பார்க்கிறோம். கிடைத்தவுடன் வேலை ஆரம்பித்து ஒரு மாதத்தில் முடித்து விடலாம் . கடந்த மாதத்தில் மெய்யான ஒளி திருச்சபையின் CBC - **பத்து** இடங்களில் நடத்தினோம்.700 பிள்ளைகளுக்கு மேலாக கலந்து கொண்டார்கள்.சிறப்பாய் பாடங்கள் நடத்தி,வசனங்களை கற்றுக் கொடுத்து, உணவளித்து, பரிசு பொருட்கள் வழங்கி சிறப்பாய் முடிக்க கர்த்தர் உதவி செய்தார்.

**நெகேமியா இரண்டாம் கட்டப் பணி, சில மாதங்களில் ஆரம்பிக்கப்படவேண்டும். ஜெபியுங்கள். உதவிக்கரங்களை நீட்டுங்கள். ஒரு குடும்பத்திற்கு 10,000/= ( பத்தாயிரம் ) என்று நியமித்திருக்கிறோம். கொடுத்து வருகிறார்கள். அநேக கரங்கள் ஒன்று சேர்ந்தால் இந்த ஆண்டிலேயே இதை முடித்துவிடலாம். ஒருவருக்கொருவர் ஊக்கமாய் ஜெபிப்போம் .**

கிறிஸ்துவின் மகிமையான இறைப் பணியில்
பாஸ்டர் S. போஸ்கோ .

**ஆண்டு சந்தா ரூ 100 / =**

**நீங்கள் அனுப்பும் கட்டிடப் பணி காணிக்கைகளுக்கு 80 G வரி விலக்கு உண்டு.**

**& 9283443230 (True Light Ministries)**

**Bank Transfer :**

**S.Bosco, State Bank Of India (SBI) A / C. No : 20003657678. Avadi .**

**Our Website : www.truelightministry.org**

***17, O.P. Raman Street, Gandhi Nagar, Avadi, Chennai - 600 054 .***

செய்தி



# நிலைத்திருக்கும் மூன்று



## 1. தாவீதின் வீடு

**“இப்போதும் கர்த்தாவே,தேவரீர் அடியானையும் அவன் வீட்டையும் குறித்துச் சொன்ன வார்த்தை என்றென்றைக்கும் நிலைவரப்பட்டிருப்பதாக ;தேவரீர் சொன்ன படியே செய்தருளும்.**

**உனக்கு வீடு கட்டுவேன் என்று என் தேவனாகிய கர்த்தர் உமது அடியான் செவி கேட்க வெளிப்படுத்தினீர்; ஆகையால் உமக்கு முன்பாக விண்ணப்பம் பண்ண உமது அடியானுக்கு மன தைரியம் கிடைத்தது.**

**இப்போதும் உமது அடியானின் வீடு என்றென்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படிக்கு அதை ஆசீர்வதித்தருளினீர்; கர்த்தராகிய தேவன் அதை ஆசீர்வதித்த படியினால் அது என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் என்றான்”** *(1நாளா18 : 23,25, 27).*

தாவீதின் வீடு கட்டப்படும்.தாவீதின் வீடு நிலைத்திருக்கும் என்று தீர்க்கதரிசி நாத்தானால் தாவீதுக்கு அறிவிக்கப்பட்டது. தாவீதுக்கு இதற்கு முன்னால் குடியிருக்க வீடு இருந்தது. நல்ல ஒரு அழகான அரண்மனை போன்ற கேதுர மரவீடு அவனுக்கு இருந்ததது (1நாளா 17:1) ஆனால் இங்கே தேவன் உரைத்த வீடு என்பது அவனது தலைமுறை யினருக்கு வழங்கப்பட்ட அரியணை உரிமை யாகும்.இது தாவீதுக்கு தேவனால் கொடுக்கப் பட்ட ஒரு மகா பெ ரிய கனம். தாவீது இதைக் குறித்துசொல்லும்போது **“நீர் உமது அடியானுடைய வீட்டைக் குறித்து வெகு தூரமாயிருக்கும் காலத்துச் செய்தியையும் சொல்லி என்னை மகா மேன்மையின் சந்ததியின் மனுஷனாகப் பார்த்தீர்.உமது அடியானுக்கு உண்டாகும் கனத்தைப் பற்றி தாவீது அப்புறம் உம்மோடே சொல்வது என்ன?தேவரீர் உமது அடியானை அறிவீர்** (17,18).கர்த்தர் சொன்னபடியே செய்தார். தாவீதும் கனம் பெற்றான்.தாவீதின் வீடும் (சந்ததி)கனம் பெற்றது.

**கர்த்தருக்குள், கர்த்தர் அருளும் இரட்சிப்புக்குள் வந்தவர்களைக் காட்டிலும், அதிலே நிலைத்திருக் கிறவர்கள் அதிக பாக்கியவான்கள்.**

தாவீதின் வீட்டைப்போல் நாமும் நிலைத்திருக்க வேண்டுமென்றால் தாவீதின் காரியங்கள் நமக்குள்ளேயும் காணப் பட வேண்டும். கர்த்தருக் குள், கர்த்தர் அருளும் இரட்சிப்புக்குள் வந்தவர் களைக் காட்டிலும், அதிலே நிலைத்திருக்கிற வர்கள் அதிக பாக்கியவான்கள். தாவீதின் காரியம் என்னவாயிருந்தது என்று பார்க்கும் போது **முதலாவதாக, அவனுக்குள்ளே கர்த்தருக்காக கட்டுதலும்,கர்த்தரால் கட்டப் படுதலும் காணப்பட்டது.** இனிமையான தொரு இளைப்பாறுதலை தாம் அடைந்து விட்டதாக தாவீது நினைத்தபோது, அவன் இருதயம் இறை வனை நினைத்து உருகியது. குகைகளில் வாழ்ந்த தனக்கு, ஆடுகளின் பின்னே வனாந் தரங்களிலும் நடந்து திரிந்த தனக்கு, கேதுரு வீடு கிடைத்தபோது தேவபிரசன்னத்தை அவன் விட்டுவிடவில்லை. தேவனை மறக்கவும் இல்லை. மாறாக, அந்த தேவனுக்காக நன்மையான காரியங்களை நடப்பிக்க வேண்டு மென்று உள்ளத்திலே அதிக தாகம் கொண்டான். அந்த வாஞ்சை,அந்த விருப்பம் அவனை அமரவிட வில்லை. கர்த்தருக்காக காரியங் களை நடப்பித்துக் கொண்டேயிருந் தது. ஆரம்ப நாட்களில் கர்த்தருக் காக நடந்தவர்கள், ஓடினவர்கள், பிரயாசப்பட்டவர்கள், காரியங் களை எடுத்து நடப்பித்தவர்கள் வசதிகள் வாய்ப்புகள் பெருகின வுடனே கொஞ்சம் கொஞ்சமாக விலகி நிற்பதும்,அந்த வசதிகளுக் குள்ளே தங்கள் மனதை செலுத்திவிட்டு அதிலே மயங்கி நிற்கிறதுமான இந்த கால கட்டங்களில், அநேக தாவீதுக்கள் தேவனுக்கு தேவையாயிருக்கிறது.



கூடாரங்களிலே காணப்பட்ட தேவபிரசன்ன சின்னங்களை தேவாலயத் திற்குள் கொண்டு வர விரும்பினான். உடன்படிக்கை பெட்டி இப்படியிருக்கலாகாது. அதற்கென்று மகிமையான ஆலயம் கட்டி எழுப்பப்பட வேண்டுமென்று அதிகமாய் விரும்பினான். அதற்காக பல தேசங்களிலி ருந்தும் பொருட்களை சேகரிக்க ஆரம்பித் தான். காணிக்கைகளை சேர்த்து வைத்தான் *(1 நாளா 29 :2,9).* வாஞ்சையோடு இருந்த தாவீதுக்கு கர்த்தர் இடம் கொடுக்க வில்லை. ஆளை மாற்றிய போதும் அவன் ஆடிப்போகவுமில்லை, வாடிப்போகவுமில்லை. யாரைக் கொண்டு வேண்டு மென்றாலும் கர்த்தர் செய்யட் டும். ஆனால் ஆலயம் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளிலிருந்து அவன் கொஞ்சமும் விலகவில்லை. நம்முடைய கனம் குறைத்து மதிப்பிடும் பொழுது, அல்லது நாம் கனவீனம் அடையும் பொழுது நம்முடைய மனம் என்ன நிலையிலிருக்கிறது? சூழ்நிலைகள் மாற்றப்படும்போது, நம்மைச் சூழ்ந்திருந்த பழைய நிலைகளெல்லாம் வீழ்ந்து போகி றது. குறிக்கோள்கள் குறைத்து மதிப்பிடப்படும் பொழுது குறிப்பு கள் பின்னால் தள்ளப்பட்டு, நம்முடைய குரைப்புகளே முன் வரிசையைப் பிடிக்கிறது. ஆனால் தாவீதின் நிலையில் எந்த மாற்றமும் இல்லை.மாறாக ஆலய கட்டு மானப் பணிக்கு தேவையான பொன்னையும், வெள்ளியையும், பணத்தையும் சேகரித்தான்.


**சூழ்நிலைகள் மாற்றப்படும்போது, நம்மைச் சூழ்ந்திருந்த பழைய நிலைகளெல்லாம் வீழ்ந்துபோகிறது. குறிக் கோள்கள் குறைத்து மதிப்பிடப் படும் பொழுது குறிப்புகள் பின்னால் தள்ளப்பட்டு, நம்முடைய குரைப்புகளே முன்வரிசையைப் பிடிக்கிறது.**

தேவனுடைய காரியத்திலே நம்முடைய நோக்கங்களை குறிக்கோள்கள் சரியாயிருக்கும் பட்சத்திலே, நம்மைச் சுற்றி நெருக்குகிற, நம்மை பின்னால் இழுக்கிற,நம்மை கனவீனம் பண்ணுகிற எந்த ஒரு காரியமும் நம்முடைய இலக்கை இழந்து விடச் செய்யமுடியாது, மாறாக, இலக்கை இருக்கையில் அமரச் செய்யும்.

மட்டுமல்ல, தாவீது சொல்வதைக் கவனியுங் கள். நான் என் சிறுமையிலே கர்த்தருடைய ஆலயத்திற்காக பொன்னையும், வெள்ளியையும், வெண்கலத்தையும், இரும்பையும்,மரங்களையும்,கற்களையும் சவதரித்து வைத்தேன் (1நாளா 22 : 1). இங்கே தன் சிறுமையிலே இவைகளைச் செய்கிறான். மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. இருப்பதிலேயிருந்து எடுத்துக் கொடுப் பது எளிது.இல்லாமையிலிருந்தும் இயலாமையிலிருந்தும், குறைவிலிருந்தும், சிறுமையிலிருந்தும் எடுப்பது அவ்வளவு எளிதானதல்ல.

**மக்கதோனியா நாட்டுச் சபையார் மிகுந்த உபரவத்தினாலே சோதிக்கப்படுகையில் கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும் தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய் கொடுத்தார்கள்.**

**மேலும், அவர்கள் தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்கள்** (2கொரி 8 :2,3)இந்த ஒப்புக்கொடுத்தல் எப்படி இருக்கிறதென்று கவனித்தீர்களா? நிறைவாய் இருப்பதிலிருந் தும் தேவனுடைய ஊழியங்களுக்காக, தேவனுடையஆலயத்திற்காக எடுத்துக் கொடுக்க



மனமில்லாமல் நாங்கள் தேவனுடையவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களும் அநேகர் உண்டு. (கவனியுங்கள் நம்மோடு இருக்கிற ஒன்றுகூட நாம் போகும் போது கூட வருவதில்லை. மாறாக, நாம் கர்த்தருக்காக இந்த பூமியில் இருக்கும்போது எதைச் செய்கிறோமோ,அது மட்டுமே கடைசிவரை வருகிறதும்,நம்மோடு நிலைத்திருப்பதுமாக இருக்கிறதென்பதை ஒருவரும் மறந்து விட வேண்டாம்). இன்றும் தங்களுக்காக வீடு கட்ட துடிப்பவர் அநேகர். அதற்காக தேவனுடைய பணத்தை கொள்ளையடிப்போரும் உண்டு. தேவனுக்கான நேரங்களையும், காணிக்கைகளையும் வஞ்சிபோரும் உண்டு.அவர்கள் தங்கள் வீட்டை மணல்மேல் கட்டுகின்றனர். அது நிலைத்திருக்காது. கர்த்தருடைய காரியங்களுக்காக தங்களை உண்மையாய் அர்ப்பணித்தவர்கள் உண்டு. தேவனே அவர்களுக்காக வீடு கட்டுவார். அது கற்பாறை மேல் கட்டப்படும்.அது நிலைத்திருக்கும்.

**வாஞ்சையோடு இருந்த தாவீதுக்கு கர்த்தர் இடம் கொடுக்க வில்லை. ஆளை மாற்றிய போதும் அவன் ஆடிப்போகவுமில்லை,வாடிப் போகவுமில்லை.**

கர்த்தரை ருசித்த தாவீதுக்கு சிறுமை ஒரு பொருட்டல்ல.வெறுமை அவனுடைய தரிசனத்தை அசைக்க முடியவில்லை.அதே நேரம் எந்த நிலையிலும் எந்த பெருமையும் அவனை ஆட்கொள்ள முடியவில்லை. கானானில் நுழைய ஆசைப்பட்ட மோசேயைப் போல் தாவீதின் வாழ்விலும் ஒரு நிறைவேறாத ஆசை இருந்தது. மிக அழகானதொரு தேவாலயம் கட்டுவது தாவீது தம் வாழ்வில் செதுக்கி வடித்த ஒரு கனவாயிருந்தது. மோசேக்கு நிகழ்ந்ததுபோல, தாவீதுக்கும் தடையுத்தரவு வந்தது. தாவீதுக்குள் ஒரு சிற்பியையும் கட்டிட கலைஞனையும் தேவன் பார்க்கவில்லை (28 3). அவர் ஒரு போர் வீரர். போர் சூழ்ச்சிகளை சிந்தித்து அலையும்

அவரது மனவீதியில் தெளிந்து வருமா தேவாலய அழகு? தேவன் உன் வாழ்விலும் என் வாழ்விலும் எதை கட்டளையிடுகிறாரோ அதற்கு உடனே கீழ்படிய நாம் ஒரு போதும் தயங்கக் கூடாது. ஏனெனில் அவர் எதைச் செய்தாலும் அங்கே ஒரு தவறும் இருக்காது. அவர் ஞானத்தில் சிறந்தவர். அறிவில் பூரணர்.நம் புத்திக்கும் அறிவுக்கும் எட்டாத காரியங்களைச் செய்கிறவர்.நம்முடைய அறிவு குறைவுள்ளது. கீழ்படிதலிலே உள்ள நம்முடைய தாமதங்கள், மந்தங்களை நம் கிறிஸ்தவ வாழ்க்கையில் அனுமதித்துவிடும். இப்படிப்பட்ட மந்தங்கள் அல்லது அசமந்தங்கள் நம்முடைய அர்ப்பணிப்பை குறையச் செய்கிற, நம்முடைய தரிசனத்தை விலக்கிப் போடுகிற பிசாசின் உபாயத் தந்திரங்கள். விழிப்பாயிருப்போம்.தாவீது

**கவனியுங்கள் நம்மோடு இருக்கிற ஒன்றுகூட நாம் போகும் போது கூட வருவதில்லை. மாறாக, நாம் கர்த்தருக்காக இந்த பூமியில் இருக்கும்போது எதைச் செய்கிறோமோ,அது மட்டுமே கடைசிவரை வருகிறதும்,நம்மோடு நிலைத்திருப்பதுமாக இருக்கிறதென்பதை ஒருவரும் மறந்து விட வேண்டாம்**



கர்த்தருடைய கட்டளைக்கு **"ஆகட்டும் ஆண்டவரே"** என்றான். இந்த தேவாலயப் பணியில் தாவீதை விட தகுதிமிக்க அவனது புதல்வனாகிய சாலொமோனைத் தெரிந்தெடுத்தார். தாவீது கீழ்படிந்தது மட்டுமல்ல, தன்னையல்லாமல் வேறு யாராலும் இந்த வேலை செய்யப்படக்கூடாது என்ற தீய பண்பிற்கு அடிமைப் படவில்லை. ஒரு உண்மைத் தலைவனின் அர்ப்பண மனதுடன் இலட்சிய நிறைவேறுதலுக்காக முயற்சிக்கிறான். அவனது திறமைக்கு மேற்பட்ட காரியத்தைச் செய்ய தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட சாலொமோனுக்கு உதவியாக ஆயத்தங்களைச் செய்கிறான். தேவாலய பணிக்கானவற்றைச் சேகரித்ததோடு தேவனது கரங்களால் எழுதிக் கொடுக்கப்பட்ட மாதிரியையும் *(28:19)*. சாலொமோனுக்கு விவரித்துக் கொடுத்தான். தமது புதல்வனுக்கு இந்த காரியத்திற்கு தேவையான இலட்சியத் தெளிவையும், அர்ப்பண மனப்பக்குவத்தையும் தம்மால் இயன்ற அளவுக்கு புகட்டினான். இத்தகைய உற்சாகத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கப் பட்ட அந்த மாபெரும் பணியின் ஒவ்வொரு படிகளிலும் சாலொமோனின் இருதயத்தில் தாவீதின் அனல் எரிந்து கொண்டி ருந்திருக்க வேண்டும். இலட்சியத்தை உருவாக்கினவன் தாவீதே. சாலொமோன் வெறும் கருவி மட்டுமே.

ஏமாற்றம், அதிர்ச்சி இவைகளை மனப்பூர்வமாக சகித்துக்கொண்டது மட்டுமல்ல, பணி நிறைவேற முழு ஒத்துழைப்பையும் கொடுத்ததை நினைத்துப் பார்க்கும் போது ,அவனுடைய குணாதிசயம், அவனுக்குள் காணப்பட்ட கனி உண்மையாகவே மெச்சப்பட வேண்டிய ஒன்று. மிகுந்த பாராட்டு

தலுக்குரியது.முதலாவது,தனக்குரியதை அல்ல,அவன் தேவனுக்குரியதை தேடுகிறவனாக காணப்பட்டான். இரண்டாவதாக, உயர்வுகள் வந்தபோது பழையதை மறந்து விடாமல் எப்போதும் ஒரே நிலையிலே காத்துக் கொண்ட விதம்.

மூன்றாவதாக,ஆலயக்கட்டுமானப் பணிக்காக பிறரிடமிருந்து சேகரிப்பதோடு நின்றுவிடாமல், தனக்கு சொந்தமான பொன்னையும் வெள்ளியையும் அள்ளிக் கொடுத்த அவனுடைய உதாரத்துவ மனம். (உனக்குரியதெல்லாம் எனக்குரியது. எனக்குரியதெல்லாம் எனக்குரியது என்ற பாணியில் அல்ல)

நான்காவதாக,தேவசித்தம் என்னவென்று அறிய வந்தபோது தன்னுடைய பெயர் பிரஸ்தாபம் தன் மகிமை எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு, எப்படியாகிலும் தேவன் மகிமையடைய வேண்டும் என்ற அந்த பரந்த எண்ணம்.அதற்கடுத்த காரியங்களுக்கு தன் முழு ஒத்துழைப்பை கொடுக்கக்கூடிய அந்த விசாலமான எண்ணங்கள். கடைசியாக, இதற்கெல்லாம் காரணம் தாவீது தேவனை ருசித்த விதம்.அது மிகவும் ஆச்சரியமானது. ஆகவேதான் தன் வாழ்க்கையில் ஒரு பெரிய விழுகை வந்தபோது, தேவசத்தத்தை நாத்தான் மூலம் கேட்க வந்தபோது,ஒரு சிறு பிள்ளையைப்போல் தன்னை தாழ்த்தி மெய்யான மனந்திரும்புதலோடு கர்த்தரை நோக்கிக் கதறுகிறான். ஆம்,தவறுதான், தவறிவிட்டேன் என்று ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தோடு காண்ப்பட்ட ஒரு தேவதாசன். நம்மில் எத்தனை பேருக்கு இந்த ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் உண்டு ! தவறு என்றாலே சீறிப்பாயும் சிங்கங்களாக பாய்ந்து விழுகிற தவறாவரம் பெற்ற அநேகர் நம் கூ ட்டங்களிலே உண்டு. நான் சொல்லுவேன் தவறை ஏற்றுக் கொள்வது என்பது ஒரு மகா பெரிய உயர்ந்த பண்பு.

இப்படிப்பட்ட பண்புகளும் காரியங்களும் தாவீதுக்குள் காணப்பட்டபடியால் தாவீதின் வீடு நிலைபெற்றது. நம்முடைய காரியங்கள் எப்படி? நம்முடைய வீடும் நிலை பெற வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். தாவீதிடமிருந்து காரியங்களை கற்றுக் கொள்வோம். நம் சந்ததி என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும்.அதே தாவீது சொன்னது போல **நான் இளைஞனாயிருந்தேன், முதிர் வயதுள்ளவனுமானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும் அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை. அவன் நித்தம் இரங்கி கடன் கொடுக்கிறான்,அவன் சந்ததி ஆசீர்வதிக்கப்படும்** *(சங் 37:25,26)* ஆம், நம் சந்ததிகள் கர்த்தருக்குள் வாழும் .



## 2. விவேகத்தின் வீடு

**“வீடு ஞானத்தினாலே கட்டப்பட்டு விவேகத்தினாலே நிலைநிறுத்தப்படும்”** (நீதி 24: 3).இரண்டாவது நிலைநிற்பு விவேகத் தினால்.**இந்த விவேகம் என்று குறிப்பிடும் போது வேதம் சொல்லுகிறது புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள், புத்தியில் லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள்** (நீதி 14 :1).

குடும்பத்திற்கு தலைவன் புருஷனாயிருந்தாலும்,குடும்பத்தைக் கட்டிக் காப்பது மனைவியின் கையிலிருக்கிறது. அதாவது அந்தந்த ஸ்திரீகளின் விவேகத்தி லிருக்கிறது.ஈசாக்கு இரட்டை பிள்ளைகளில் மூத்தவனாகிய **ஏசா**வை இளையவன் யாக்கோபைக் காட்டிலும் அமதிகமாய் நேசித் தான்.ஆனால் தாய் ரெபேக்காளோ முறைப் படி மூத்தவனுக்கு போய் சேர வேண்டிய சேஷ்ட புத்திர சுதந்திரத்தை யாக்கோபு தட்டிச் சென்று போகத்தக்கதாய் மாறுபாடான ஆலோசனைகளை அவனுக்குக் கொடுத் தாள்.நாம் அதை கவனிக்கும் போது ஒரு தாயே இப்படிப்பட்ட உண்மையற்ற,தவறான ஆலோசனைகளை தன் பிள்ளைக்கு சொல்லிக் கொடுக்கிறாளே என்றுதான் எண்ணத்தோன்றும்.ஆனால் அது அப்படி யல்ல. ஈசாக்கு பாசத்தினால் கட்டப்பட்டி ருந்தான்.ஆனால் ரெபேக்காளோ விவேகத்தி னால் நிரப்பப்பட்டிருந்தாள்.அற்ப கூழுக்காக எதையும் கொடுக்கவோ, எடுக்கவோ, விற்கவோ இந்த ஏசா செய்வான் என்று அந்த சம்பவங்கள் நடக்கும் முன்பே இந்த தாய் புரிந்து வைத்திருந்தாள். ஒரே வயிற்றுப் பிள்ளைகள்தான் என்றாலும், அந்தத்தாய் புரிந்து வைத்திருக்க வேண்டியதை சரியாக புரிந்து வைத்திருந்தாள்.இந்த வீடு கட்டப் பட வேண்டுமென்றால் அது ஏசா வின் கையில் அல்ல,யாக்கோபின் கைக்குத்தான் அதிகாரங்களும்



ஆளுகையும் கொடுக்கப்பட வேண்டும் என்று நன்கு அறிந்து வைத்திருந்தாள்.அந்த அறிவின்படி, விவேகத்தின்படி அந்த வீடு கட்டப்பட்டது.யாக்கோபின் கோத்திரம் நிலை பெற்றது.பெயர்பெற்றது.பன்னிரெண்டு கோத்திரங்கள் தலையெடுத்தது.அதில் ஒன்றான யூதா கோத்திரத்திலே யூத சிங்கம் மீட்பர் **இயேசு** பிறந்தார்.உலகத்தை இரட்சிக்க நீதியின் சூரியன் உதித்தது.ஏசாவின் நிலைமை என்னவாயிற்று? ஏசா அடிமைத்தனத்தின் சந்ததியாகிய இஸ்மவேலின் குமாரத்தியை விவாகம் செய்து அடிமைத்தனத்தோடு ஒன்றிப் போனான். நித்தியத்திற்குரிய காரியங் களைச் சிந்தியாமல்,தங்கள் எண்ணப்படி நடக்கிற சீர்கெட்டவர்களுக்கு ஏசா அடையா ளமாயிருக்கிறான்.ஒரு ஸ்திரீயின் விவேகம் வீட்டைக் கட்டியது.

அநேக குடும்பங்கள் இன்று அமைதியை இழக்கிறதென்றால், அது அந்த குடும்ப ஸ்திரீயின் விவேகக் குறைவுதான். செய்ய வேண்டியதை செய்யமாட் டார்கள் செய்யக் கூடாததை செய்து கொண்டிருப்பார்கள். அன்னாளுக்கு அவமானங்கள் ஏராளம் வந்தது. சக்களத்தின் தொல்லை பொறுக்க முடிய வில்லைதான். அதற்காக இவளும் வரிந்து கட்டிக் கொண்டு எதிர்பேச்சு பேசிக் கொண்டிராமல், விவேகத் தோடும் சாந்தத்தோடும் தேவனு டைய பாதத்தில் அமர்ந்து

**நித்தியத்திற்குரிய காரியங்களைச் சிந்தியாமல்,தங்கள் எண்ணப்படி நடக்கிற சீர்கெட்ட வர்களுக்கு ஏசா அடையாளமா யிருக்கிறான். ஒரு ஸ்திரீயின் விவேகம் வீட்டைக் கட்டியது.**

உள்ளத்தின் காரியங்களை அவருக்கு ஒன்று ஒன்றாக காண்பிக்க ஆரம்பித்தாள். சிதறிப் போக வேண்டிய குடும்பம் அவளுக்கு பிறந்த உன்னதமான தீர்க்கதரிசி சாமுவேலால் கனம் பெற்றது. நிலைபெற்றது.சாந்தம் வெளிப்பட வேண்டிய அநேக குடும்பங்களில் சத்தம் அதிகமாக வெளிப்படுவதால் அநேக குடும் பங்கள் பிரிந்து பிளந்து காணப் படுகிறது. ஸ்திரீகள் தங்கள் சத்தத்தை குறைத்து சாந்தத்தை கூட்ட வேண்டும். பேச்சை குறைத்து செயலை அதிகமாக்க வேண்டும். இன்றைய அநேக குடும்பங்களில் ஸ்திரீகளின் அதிக பேச்சும், ஆணவப்பேச்சும், புருஷர்களை ஊமையாக்கிவிடுகிறது. திருமண நேரத்திலே உற்சாகமாய் காணப் பட்ட புருஷன் இப்போது சிரிப்பையும் மறந்து அநேக நேரங்களில் தானாக பேசிக்கொள்கி றான். காரணம் ஸ்திரீயின் செயல்பாடுகளே ! **சண்டைக்காரியும் கோபக்காரியுமான ஸ்திரீயுடன் குடியிருப்பதைப் பார்க்கிலும் வனாந்தரத்தில் குடியிருப்பது நலம்** (நீதி 21:19). என்று அநேக புருஷர்கள் எப்போதாவதுதான் வீட்டிற்குள்ளே தலை காட்டுவார்கள். அவர் எப்போது வருவார் எப்போது போவார் என்று அங்கே யாருக்கும் தெரியாது.காரணம் வனாந்தரமே மேல் என்று ஒதுங்கிக் கொண்டதுதான். சில வீடுகளில் **சண்டைக் காரியோடே ஒரு பெரிய வீட்டில் குடியிருப் பதைக் காட்டிலும் வீட்டின் மேல் ஒரு மூலையில் தங்கியிருப்பதே நலம்** (21: 19).என்று ஒதுங்கிக் கொள்வார்கள். நலமானதையும் பேசாமல் மௌனமாகவே இருப்பார்கள். விவேகமான புருஷர்கள்.

பேதுரு தன் நிருபத்திலே குறிப் பிடும்போது, **அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்கு கீழ்படிந் திருங்கள், அப்பொழுது அவர் களில் யாராவது திருவசனத் திற்கு கீழ்படியாதவர்களாயிருந் தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனை யின்றி மனைவிகளின் நடக்கை யினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள்.** (1பேதுரு3 :1). இப்படி நடப்பவர் கள் விவேகமான ஸ்திரீகள். கீழ்படிதல் என்பது ஆண் பெண் இருவருக்கும் பொருந்துகின்ற ஒரு கோட்பாடு.கீழ்படிதல் குறை யும் போது பேச்சுக்கள் பெருகு கிறது. முதலில் கடினமான குறை காண்கின்ற பேச்சும், சொல்லும் கணவர்களையும் மனைவிகளையும் மற்றெல்லாரையும் வெகுதூரம் துரத்தி விடுகிறது. மற்றவர்கள் நம்மிடம் எப்போது கொடூரமாயிருக்கிறார்கள் என்பது தேவனுக்கு நன்றாகத் தெரியும்.ஒரு கணவன் குடிப்பது, அடிப்பது, கைவிடுவது ஆகியவைகளெல்லாம் தேவன் தெளிவாகக் காண்கிறார்.ஆனால் இவைகளுக்கெல்லாம் பதிலாக மனைவியானவள் பேய்த்தனமான (யாக்கோபு3:15) கசப்புடன் நடந்து கொண்டால் அவள் எப்படி இவளைவிட சிறந்தவள் ஆவாள்? தன்னுடைய சொந்த வாழ்க்கையை மாற்றிக்கொள்ளாமல் பாவஞ் செய்கிற அவளுடைய கணவன் மாற வேண்டும் என்று அவனைச் சுட்டிக்காட்டு கின்ற கசப்பான மனைவி வேதாகமம் கூறுகின்ற கீழ்படிதலின் எடுத்துக்காட்டல்ல. அவள் விவேகமானவளும் அல்ல. கடினமான கசப்பாக பேசுகின்ற எவரும் மற்றவர்களை அவர்களுடைய பொறுப்பிலிருந்து ஓடும்படி சொல்கிறவர்கள். கீழ்படிந்திருப்பது என்பது வீட்டுவாசலில் போடப்பட்டிருக்கும் மிதியடி போலிருப்பது அல்ல. மாறாக,நம்முடைய வாழ்க்கையில் பிறருக்கு வேலை செய்ய

**தன்னுடைய சொந்த வாழ்க்கையை மாற்றிக்கொள்ளாமல் பாவஞ் செய்கிற அவளுடைய கணவன் மாற வேண்டும் என்று அவனைச் சுட்டிக்காட்டுகின்ற கசப்பான மனைவி வேதாகமம் கூறுகின்ற கீழ்படிதலின் எடுத்துக் காட்டல்ல. அவள் விவேகமான வளும் அல்ல.**

வேண்டும் என்ற ஒரு ஆர்வம்.**வேலை** என்பது வேலைக்காரன், வேலைக்காரி என்கிற வார்த்தையின் ஒரு பகுதி. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வேலைக்காரர்கள் கீழ்படிதலாய் இருக்கும்படி எதிர்பார்க்கப்படு கிறார்கள். மனைவி கீழ்படிதலாய் இருக்க வேண்டும் என்று கணவன் எதிர்பார்க்கிறார். இது நியாயமே! வாடிக்கையாளர்கள் சேவை, இல்லத்திலும், சபையிலும், வியா பாரத்திலும் குறைவுபடுகிறது. வாடிக்கை யாளர் சேவையைப் பொருத்துதான் வியாபார மும். விவேகத்தை அடிப்படையாகக் கொண்டுதான் குடும்ப வளர்ச்சி. வேலைக் காரர்களாய், வேலைக்காரிகளாய் இருப் பதற்கு பதிலாக ராஜாக்களும் ராணிகளுமாக இருக்க விரும்புகிறோம். நம்முடைய பொறுப்பு என்ன? அழைப்பு என்னவென்று சரியாய் அறிந்து புரிந்து செயல்பட வேண்டும்.

விவேகத்தின் இன்னொரு செயல்பாடு ஸ்திரீகளின் செலவு செய்யும் முறை.பணத்தை கண்டபடி செலவழிக்கிற குடும்பத் தலைவிகள் உண்டு.எதைப் பார்த்தாலும்உடனே வாங்கி விட வேண்டும். கண்களின் இச்சை எதிலும் திருப்தியடையாது. பீரோக்களில் நூற்றுக் கணக்கான சேலைகளை அடுக்கி வைத்துக் கொண்டு வருவோர் போவோரிடம் காண்பிப்ப தில் ஒரு இன்பம். பொருட்களை வாங்கி வாங்கிப் போடுவதில் ஒரு அலாதிப் பிரியம். பெரும் செலவாளிகள்.கணவன் இவள் தொல்லை பொறுக்க முடியாமல் கைக்கு வருகிற சம்பளத்திற்கு மேல் அங்கே இங்கே என்று கடன் வாங்கி வட்டி, வட்டிக்கு வட்டி என்று கடைசியில் அந்த குடும்பம் நலிவிழந்து, மெலிந்து, பொலிவிழந்து நிற்கும். இப்படி அநேக குடும்பங்கள் இன்று நின்று கொண்டிருக் கிறது பரிதாபமே! எதிலும் ஒரு திருப்தி தலைவி களுக்குத்தேவை. **போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்** (1தீமோ6 :6). உணவிலும் ஒரு கட்டுப்பாட்டு முறையை எப்போதும் காத்துக் கொள்ள வேண்டும். அநேக வீடுகளில் ராணி அடிக்கடியாய் படுத்து விடுவாள். ராஜாவும் பதார்த்தங்களை வேறு வழியில்லாமல் அடிக்கடியாய் ***Hotel***லிலிருந்து வாங்கி வந்து விடுவார். ***Hotel Bill*** யே மாதந்தோறும் கழுத்தை நெறிக்கும். சமையல் செய்ய சோம்பல்தனம். **சோம்பல் வறுமையை கொண்டு வரும். தரித்திரத்தைக் கொண்டு வரும் என்று வேதம் எச்சரிக்கிறது** (நீதி 6 : 6,11).சில வீடுகளில் அதிக விவேகமாய் நடக்கிறேன் பேர்வழி என்று சாப்பாடு காரியங்களில் மிகவும் கஞ்சத்தனம் பண்ணு வார்கள். அதுவும் விவேகமல்ல. இதனால் கணவன் சலிப்படைந்து பாதி நாள் ***Hotel*** லிலே பதம் பார்த்து விடுவார். எப்படியோ கூட்டிக் கழித்தால் ***Bill Amount*** மாறாது. வாரியிறைத்து விருத்தியடைவாரும் உண்டு. குடும்பத் தலைவிகள் ஞானத்திற்காக தேவனிடம் விண்ணப்பிக்க வேண்டும்.ஞானம் விவேகத் திற்கு துணைபோகும்.அநேக குடும்பங்களில் வரவு குறைவுதான். இதுவே பிரச்சனைகளை குடும்பத்திற்குள் கொண்டு வந்துவிடுகிறது. அன்பு தணிந்து போகிறது.கணவன் மனைவிக் குள் புகைச்சல்,வாக்குவாதங்கள், சண்டை கள், அடிதடி கடைசியில் பார்த்தால் சடுதியான மரணங்கள்,தற்கொலைகள், ரொம்ப பரிதாபம் அநேக குடும்பங்களுக்குள் வலம் வந்து கொண்டிருக்கிற ஒரு காட்சிதான் இது. வேதம் இதற் கெல்லாம் நல்ல ஆலோசனைகளை வைத்திருக்கிறது. ஆகவே வேதத்தை நேசிப்பது நலம். வேதத்தை நேசிப்




பவர்களுக்கு இடற லில்லை. ***Psychologist, Counselling*** என்று அங்கேயும் இங்கேயும் பணத்தை பறிகொடுக் காமல் இலவசமான விடுதலை யும் சமாதான மும் வேதத்தில் உண்டு. குடும்பத் தலைவிகள் புரிந்து கொள்ள வேண் டும். குடும்பத் தலைவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும். ஸ்திரீகள் தெரிந்து கொள்ள வேண்டிய மற்றொரு காரியம், “**சஞ்சலத்தோடு கூடிய அதிகப் பொருளிலும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடு கூடிய கொஞ்சப் பொருளே உத்தமம். பகையோடி ருக்கும் கொழுத்த எருதின் கறியைப் பார்க்கிலும், சிநேகத்தோடிருக்கும் இலைக் கறியே நல்லது**” (நீதி *15 :16,17*).



இந்த நாட்களில் ஒரு சம்பளம் போதாது என்று கணவனும் மனைவியும் ஆளுக்கு ஒரு திசைக்கு பறக்கிறார்கள்.நிற்க நேரமில்லை, பேச நேரமில்லை, பிள்ளைகளை கவனிக்க நேரமில்லை. இப்படி பல. நம்முடைய நினைவுகள் இரண்டு சம்பளம் வந்தால்தான் குடும்பத்தை நடத்தி, பிள்ளைகளை ஆளாக்கமுடியும் என்று. ஆனால் கர்த் தருடைய நினைவுகள் வேறே. ஐந்து அப்பத் தையும் இரண்டு மீன்களையும் ஆசீர்வதித்து பெருகச் செய்ய அவரால் முடியும்.மீதியான துணிக்கைகளையும் எடுக்கச் செய்ய அவராலே முடியும்.“**கர்த்தரின் ஆசிர்வா தமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்** (நீதி *10 : 22*). **நீதிமான் வீட்டில் அதிக பொக்கிஷம்**” ( நீதி *10: 22*). ஆம், அவருடைய வழிகளும் அவருடைய நினைவுகளும், நம் நினைவு களிலி ருந்தும், நம் வழிகளிலிருந்தும் வேறு பட்டது (ஏசாயா 55:8).ஸ்திரீகள் இதை புரிந்துகொள்ள வேண்டும். இப்படிப்பட்ட விவேகங்கள் வீட்டைக் கட்டும். அவர்கள் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பார்கள்.

# 3. சத்திய உதடு




**“சத்திய உதடு என்றும் நிலைத்திருக்கும் ”** *(நீதி 12 : 19)*.

உலகப் பழமொழி, பொய் பேசுகிறவனுக்கு போஜனம் கிடையாது. அதாவது வீட்டிலே சாப்பாட்டுக்கே கஷ்டமாயிருக்குமாம். ஆனால் வேதம் சொல்லுகிறது **உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்** *( நீதி 28 : 20)*. உண்மையற்றத்தனம் தேசத்திலே மலிந்து காணப்படுகிறது. ஆகவே தேசத்திலே தரித்திரம் வறுமை. உண்மையற்றத்தனம் சபைகளுக்குள் ஏராளமாய் தாராளமாய் காணப்படுகிறது. ஆகவே சபைகளும் இலக்கை அடைய முடியாமல் ஆவிக்குரிய வறுமையிலே காணப்படுகிறது. சவுலை அருமையாய் அழைத்தார். ஆச்சரியமாய் உயர்த்தினார். அலங்காரமாய் நிறுத்தினார். ராஜாவின் கிரீடம் சூட்டி கர்த்தர் மகிழ்ந்தார். ஆனால் அந்த மகிழ்ச்சி ரொம்ப காலம் நிலைக்கவில்லை.அமலேக்கியரின் கொழுத்த காளைகளுக்காகவும் ஆடுமாடுகளுக்காகவும் அற்பமாய் நடந்து சத்திய உதட்டை தொலைத்து விட்டான். ராஜ்யபாரத்தையே இழக்க வேண்டியதாயிற்று. எத்தனை பரிதாபம் ! *(1சாமு 15 : 3,9,21–23)*. அற்பமான பாபிலோன் சால்வையின் மேல் ஆகான் வைத்த ஆசைக்காக முழு இஸ்ர வேலரும் எமோரியரிடம் வீழ்ந்தார்கள். ஆகானின் உண்மையற்றத் தனம் முழு இஸ்ரவேலருக்கும் வெட்கத்தை உண்டு பண்ணியது. **பொய் தரித்திரத்தை தருவிக்கும் வெட்கத்தை உடுத்தும். பொய்ச் சாட்சிக்காரன் ஆக்கினைக்குத் தப்பான். பொய்களை பேசுகிறவனும் தப்புவதில்லை, பொய்களை பேசுகிறவன் நாசமடைவான்** *(நீதி 19:5,9)*. அநேகருக்கு பொய் பேசுவது என்பது ஒரு வாடிக்கையான காரியம்.ஒரு நாளில் குத்து மதிப்பா கொஞ்சம் பொய் சொல்லாமல் அவர்களால் இருக்கமுடியாது.சிலருக்கு பொய் பேசினால்தான் அன்று தூக்கமே வரும்.இதன் பின்விளைவுகள் அதிகம்.இதை இப்போது உணர்வாரில்லை.

அடுத்ததாக, சத்திய உதடு என்று பார்க்கும்போது உபதேச உண்மையை எடுத்துரைக்கிறது. உபதேசத்தில் கூட்டல் கழித்தல் இல்லாமல் சத்திய வசனத்தை சத்தியமாக பேசுகிற உதடு. (உள்ளம்) ஆதாயத்திற்காக சத்திய வசனத்தை கூட்டி குறைத்தல் என்பது பொய் நாவு. பவுலோடு ஆரம்ப நாட்களில் இருந்த அநேக ஊ ழியர்கள் ஆதாயத்திற்காகவும், இவ்வுலக ஆசாபாசங்களுக்காகவும் உபதேசத்திலே வழிமாறி, ஆரம்ப அஸ்திபாரத்திலிருந்து வழி விலகி பவுலைவிட்டு பிரிந்து போய்விட்டார்கள்.பவுல் அப்படிப்பட்டர்களுக்காக மிகவும் துக்கமடைந்தான். தீமோத்தேயுக்கு எழுதும்போது **ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக் கொண்டு, சீர்கேடான வீண் பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய் பேர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு.சிலர்அதை பாராட்டி, விசுவாசத்தை விட்டு வழுவிப் போனார்கள். கிருபையானது உன்னோடே கூட இருப்பதாக** *(1தீமோ 6 : 20,21)*. மேலே போடப்பட்டிருக்கிற அந்த ‘**ஓ**’ சத்தத்தின் வலிமை யைக் காட்டுகிறது. எல்லோரும் இப்படி போய்விடு கிறார்கள். தீமோத்தேயுவே விழிப்பாயிரு என்று ஆதங்கத்தோடு சொல்கிறார். 2 தீமோத்தேயு

**பிரசங்கத்திற்கு ஒரு நீதி. தன் குடும்பம் என்று வரும்போது ஒரு நீதி என்று தனி வழி அமைத்து நடக்கிற மேய்ப்பர்களும் பிரசங்கிமார்களும் தலைவர்களும் பெருகி வருகிறார்கள். உண்மைத் தலைவர்களை காண சபைகள் ஆவலாய் இருக்கிறது. உலகம் அப்படிப்பட்டவர்களை காண விருப்பமுள்ளதாகத்தான் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தருடைய கண்கள் அப்படிப்பட்டவர்களை தேடிக்கொண்டு தானிருக்கிறது.**

4–ம் அதிகாரத்தில் அநேகர் தன்னை விட்டு விலகிப் போனதை பெயர் பட்டியலோடு சொல்லி வேதனைப்படுகிறார். ஆம், இது கடைசி காலம்.சத்தியத்தை வாங்குவதைக்காட்டிலும் சத்தியத்தை விற்பதுதான் அதிக நடமாட்டத்திலிருக்கிறது. (நீதி 23:23). **தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி.... சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும், அநியாயத் துக்கும் விரோதமாய் தேவ கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது** *(ரோமர்1 : 2,5,18).*



ஆரம்ப பிரசங்கத்திலே மூவாயிரம், ஐயாயிரம் என்று இரட்சிக்கப்படும் அளவிற்கு வைராக்கியம் நிறைந்த பேதுருவே ஒரு நேரம் வரும்போது, சத்தியத்திலே மாய்மாலம் பண்ணினான்.அந்த *Senior* பேதுருவை எந்த முகத்தாட்சணியமும் பாராமல் *Junior* பவுல் முகத்திற்கு நேராக கடிந்து கொள்கிறான். இப்படி அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்தின்படி சரியாய் நடவாததை நான் கண்ட போது, எல்லோருக்கும் முன்பாக நான் பேதுருவை நோக்கி.....(கலா 2 : 14)பவுலைப் போன்ற சத்திய உதடுகள் இன்றைக்கு தேவையாயிருக்கிறது. பிரசங்கத்திற்கு ஒரு நீதி.தன் குடும்பம் என்று வரும்போது ஒரு நீதி என்று தனி வழி அமைத்து நடக்கிற மேய்ப்பர்களும் பிரசங்கிமார்களும் தலைவர்களும் பெருகி வருகிறார்கள். உண்மைத் தலைவர்களை காண சபைகள் ஆவலாய் இருக்கிறது. உலகம் அப்படிப்பட்டவர்களை காண விருப்பமுள்ளதாகத்தான் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தருடைய கண்கள் அப்படிப்பட்டவர்களை தேடிக் கொண்டுதானிருக்கிறது. ஆரம்ப நாட்களில் அநேகர் நன்றாகத்தானிருந் தார்கள். எடை கூட கூட கிடைக்கும் விடை ஏமாற்றமாகத்தானிருக்கிறது. எடையைக் கண்டு குடை பிடிக்கிற இடையில் வந்த ஜால்ரா கூட்டங்கள் அதிகமாக இருக்கிறதாலே, எடைகளின் நடை இன்னும் ஒரு படி மேலே சென்று ஆணவப் போக்கைத் தான் காண்கிறோமேயொழிய பணிவான நடையைக் காண முடியவில்லை. ஆனால் எல்லாவற்றையும் காண்கிற ஒரு தேவன் உண்டு. அவர் எடைகளுக்கும், நடைகளுக்கும், விடைகளுக்கும் தக்க நீதியாய் பதிலளிக்கிறவர். நீதியை வெளிப்படுத்துகிறவன்தான் சத்திய வாசகன் (நீதி12:17). மற்றவர்கள் இடை மெலிந்த சதி வாசகன். ஆம், வஞ்சகத்தை வெளிப்படுத்துகிறவன் பொய்சாட்சிக்காரன்(நீதி12:17). சத்தியத்திற்கு சாட்சியாய் ஜீவிப்போம். சத்தியமே நித்தியம்.அதுவே நம்மை நித்திய வாசலுக்குள் கொண்டு செல்லும். **கெட்ட சிந்தையுள்ளவர்களும், சத்தியமில்லாதவர்களும் பக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும். இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு** *(1 தீமோ 6 : 5).*

தேவன் எல்லாவற்றையும் நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார். சத்தியத்திற்காக ஜீவிப்போம்.சத்திய உதடை காத்துக்கொள்வோம். **என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை** *( 3 யோவான் 4).*

**சத்திய வேதம் பக்தரின் கீதம்**
**சுத்தர்கள் போகும் பாதையின் தீபம்**
**உத்தம மார்க்கம் காட்டும்**
**எத்தனை துன்பம் துயரம் வந்தும்**
**பக்தனை தேற்றிடும் ஔஷதம்**

# சிந்தனைக்கு

- வாழ்க்கை என்ற வீடு சரியான அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட வேண்டும் .
- தேவனிடம் செல்லும் வாயிலுக்கு அருகில்தான் நரகத்தின் கதவும் இருக்கிறது.
- பிரிவினை என்பது தேவனிடமிருந்து வருவதில்லை இணைப்பு என்பது பிசாசினிடத்திலிருந்து வருவதில்லை.
- தேவனன்றி கிடைக்கும் வெற்றி வெறுமையானதும் மனதுக்கு சஞ்சலமுமானதே !
- பிசாசுடைய ஆப்பிள் பழங்கள் வெளிப்பார்வைக்கு அழகுள்ளவைகள் உள்ளேயோ முற்றும் அழுகினவைகள்.
- சரியான மனந்திரும்புதல் இல்லாமல் எடுத்து வைக்கும் அடிகள் நம் வாழ்க்கையில் கிடைக்கும் ஒவ்வொரு அடிகளே.
- நடந்து காட்டுங்கள் என்று சொல்லுவது சுலபம் நடந்து காட்டுகிறேன் என்று சொல்லுவது கடினம்

## திரு குரல்

1. இந் நிலத்தில் முளைத்ததென்பதை முளை காட்டும் - காட்டும்
   வேத வார்த்தையால் பிறந்தார் வாய்ச்சொல் .

2. முகம் மலர் நட்பு அது நட்பன்று
   அகம் மலர் நட்பே நட்பு.

3. தூற்றுவார் உரத்த குரலால் தீமையை - நன்மையை
   போற்றுவார் உலர்ந்த குரலால்

4. குணமில்லா பணமுடையோனையும்
   சுற்றமில்லா குற்றமுள்ளோனையும்
   சுற்றோ சுற்று என்று சுற்றுகிறது இவ்வுலகு .

## வானவெடி

ஆத்துமாவில் செழிப்படைய வேண்டுமா? செல்வங்களை பொக்கிஷ அறையின் இருட்டுக்குள் ஒளித்து வைக்காமல், சுவிசேஷப் பணிக்கும், சபை ஊழியங்களுக்கும், ஏழைகளுக்கும் கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக் கொடுங்கள்.உலகப் பாதைக்கு நேர் முரணானது விசுவாசப்பாதை. உலக வங்கி சில ஆண்டுகள் வைப்புக்கு இரண்டு மடங்கு தரும்.பரலோக வங்கியோ பன்மடங்கு தரும்.கறுப்பு பண ***Swiss Bank*** நமக்குரியதல்ல. என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் ஒருபோதும் அழியாத **இயேசுவின் (பே)பங்கே** நமக்குரியது .



# சகோதரிகள் பகுதி

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எங்கள் வாழ்த்து தலை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்த மாத இதழில் சகோதரிகளாகிய நாம் லாசருவின் சகோதரிகளாகிய **மார்த்தாள், மரியாளைக்** குறித்து தியானிக்க ஆவியானவர் உதவிச் செய்வாராக.

லூக்கா 10:38 - 42 வரையுள்ள வசனங்களை பார்க்கும் போது,**"பின்பு அவர்கள் பிரயாணமாய்ப் போகையில், அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள் "**. பெத்தானியாவில் இயேசு சென்றபோது அங்கே லாசருவின் சகோதரியாகிய மார்த்தாள்தான் முதலில் தன் வீட்டிற்கு வரவேற்று உபசரிக்கிறாள்.**அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள் அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து,அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.**இதையே ஆங்கிலத்தில் வாசிக்கும் போது ***And she had a sister called Mary, who also sat at 'Jesus' feet and heard His word*". **ஏற்கனவே மார்த்தாள் இயேசுவின் பாதத்தில் அமர்ந்திருக்கிறாள், மரியாளும் உடன் அமர்ந்திருக்கிறாள் என்பதுதான் இதன் அர்த்தம்.**

**அருமையானவர்களே, இங்கே இவர்கள் இருவரும் அமர்ந்திருப்பது தேவ சமூகம்தான். ஆனால் அடுத்த வசனம் சொல்கிறது..வசனம் 40 ல் மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து,......எப்பொழுது தேவ சமூகத்தினின்று எழுந்தாள்? இயேசுவை தன் வீட்டிற்கு மனப்பூர்வமாய் அழைத்து, உபசரிக்கும்படி வரவேற்றது மார்த்தாள்தான். இருவருமே இயேசுவின் பாதத்தில் அமர்ந்து,அவருடைய வாயிலிருந்து புறப்பட்டு வருகிற கிருபையுள்ள வார்த்தைகளை கேட்டுக்கொண்டு தானிருந்தார்கள். இதற்கிடையில் மார்த்தாளோ, பற்பல காரியங்களை சிந்தித்து..பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து .... என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் மரியாளோ மிகுந்த வாஞ்சையோடு ....தாகத்தோடே இயேசுவின் பாதத்தில் அமர்ந்து வசனத்தை கேட்டுக்கொண்டே இருந்தாள். சபைக்குள்ளும் இப்படிப்பட்ட இரண்டு வகை கூட்டம் உண்டு. கிருபையுள்ள, சத்தியமுள்ள வார்த்தைகளைக் கேட்டு,ஆறுதல்,சமாதானம் அடைந்து வேத வசனத்திற்கு தங்களை ஒப்புக்கொடுத்து, தன்னை அர்ப்பணித்து,இயேசுவுக்காக, இயேசுவோடு, இயேசுவுக்குள்ளாக தான் எப்படி வாழ வேண்டுமென்பதை உணர்ந்து கீழ்படிகிற ஒரு கூட்டம்.இன்னொரு கூட்டம் இயேசுவுக்காக அதை செய்தேன் இதைச் செய்தேன்...என்று தங்கள் கிரியைகளை முன்வைத்து, தங்களையே மேன்மை பாராட்டி, மற்றவர்களை குற்றம் கண்டுபிடிக்கிற, குறை கூறுகிற ஒரு கூட்டம்.**

**இங்கே மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து, ஆண்டவரே, நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்கு கவலையில்லையா?எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள்.**இங்கே மார்த்தாள் இயேசுவுக்காகத்தான் அநேக காரியங்களை செய்கிறாள். அவருடைய பசியை போக்க அருமையான உணவுகளை சமைக்கும்படி பற்பல வேலைகளை செய்து சரீரத்தில் களைப்படைகிறாள்...சோர்வடைகிறாள்...வருத்தமடைகிறாள்..... எல்லாம் சரிதான். ஆனால் அவளுடைய வருத்தங்கள் கோபமாக,எரிச்சலாக மாறி தன் சொந்த சகோதரியை குற்றம் சாட்டி, குறை கூறி கடைசியாக இயேசுவிடமே,என் வருத்தத்தைக் குறித்து உமக்கு கவலையில்லையா? என்றதுடன்

எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்று ஆண்டவருக்கே ஆலோசனை கொடுக்கிறாள். ஆண்டவராகிய இயேசுவை மனமுவந்து வரவேற்று, தன் வீட்டில் ஏற்றுக் கொண்டவள்தான்...ஆவலோடு அவருடைய பாதத்தில் அமர்ந்து வார்த்தையை கேட்டவள்தான்.ஆனால்..இப்போதோ சோர்வு,வருத்தம், இயேசுவையே குற்றம் சாட்டி....ஆம், அருமையானவர்களே, நாம் கர்த்தருக்காகத்தான் ஊழியம் செய்கிறோம்....நற்கிரியைகளைச் செய்கிறோம், நம்முடைய உள்நோக்கம் என்ன?நம் இருதயத்தின் சிந்தை என்ன?அதை கர்த்தர் காண்கிறார். ஊழியம் நம்முடைய ஆதாயத்திற்காகவா?நம்முடைய புகழ்ச்சிக்காகவா?மனுஷரை பிரியப்படுத்தும்படிக்காகவா?எதற்காக? வேதம் சொல்லுகிறது, ''**வேலைக்காரரே, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்து,நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ் செய்யாமல்,தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ் செய்யுங்கள்**'' (கொலோ 3 : 22).

நம் வாழ்க்கையில் எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம்?தேவனுடைய வார்த்தையின் மேல் விசுவாசம் வைத்து,நம்முடைய கவலைகளை பாரங்களை அவரிடத்தில் வைக்கிறோமா? அல்லது மார்த்தாளைப்போல என் திறமை, என் பெலம்,என் வேலை,என் சம்பாத்தியம் என்று ஓடி ஓடி களைத்துப்போய்..மிகவும் வருத்தப்பட்டு..கர்த்தரை குறை கூறிக்கொண்டிருக்கிறோமா? என் நிலைமைக்கு அவள்தான் காரணம்.. அவன்தான் காரணம் என்று சகோதரர்களை குறை கூறிக்கொண்டிருக்கிறோமா?...அருமையானவர்களே,இந்த உலகத்தில் வாழும்போது நம் சரீரத் தேவைகளைக் குறித்தும் கர்த்தர் கரிசனை உள்ளவராகவே இருக்கிறார்.ஆனால் நம்முடைய தேடல் எதுவாக இருக்கிறது? தேவஇராஜ்யத்தையும், தேவ நீதியையும் தேடுகிறவர்களாய் இருக்கும்போது மற்றவையெல்லாம் கூட கொடுக்கப்படும் என் வேதம் சொல்லுகிறது.

இறுதியாக,**இயேசு அவளுக்கு பிரதியுத்தரமாக: மார்த்தாளே,மார்த்தாளே,நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே,மரியாள் தன்னைவிட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்றார்.**அருமையானவர்களே, இங்கே மார்த்தாள் ஆத்ம பசியைவிட சரீர பசிக்கு அதிக கவனம் செலுத்தி அதற்காகவே மிகுந்த பிரயாசம் எடுத்துக்கொண்டாள்.இந்த உலகத்தில் வாழும்வரை உண்ண உணவும், உடுக்க உடையும்..சகலவித தேவையும் நமக்கு உண்டு.ஆனால் மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்வதில்லையே.. நம் ஆத்துமா வாழும்படி, நம் ஆத்துமா பிழைத்துக்கொள்ளும்படி அவருடைய வார்த்தையாகிய மன்னாவை நாம் அனுதினமும் புசிக்க வேண்டியது அவசியம்.இதைத்தான் மரியாள் செய்தாள் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவருடைய வார்த்தையினாலே போதனை அடைந்தாள்.தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள்.

பிரியமானவர்களே,நாமும் மார்த்தாளைப்போல கர்த்தரை உபசரித்து கனம் பண்ணி,அவருக்கு பணிவிடை செய்வோம்.ஆனால் அதே சமயம் மார்த்தாளைப்போல குறை கூறுகிறவர்களாக அல்ல,எந்த சூழ்நிலையிலும் மனரம்மியமாக இருந்து கர்த்தருடைய வார்த்தையின்மேல் விசுவாசத்தை வைத்து,மரியாளைப்போல இயேசுவின் பாதத்தில் அமர்ந்து,தேவனுடைய வார்த்தைகளை கற்றுக் கொள்கிறவர்களாக விசுவாச வாழ்க்கையில் இன்னும் கர்த்தரை கிட்டிச் சேருகிறவர்களாக காணப்படுவோம்.

**கடைசி காலத்திலே, வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் (நல்ல பங்கு) பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.**ஆமென். கர்த்தர்தாமே இந்த வார்த்தைகளைக் கொண்டு நம்மை ஆறுதல்படுத்துவாராக. ✸

**சகோதரி : லீமா போஸ்கோ**




## கவனியுங்கள்

கடந்த மாதம் 16 பேர் எழுதிய தில் 14 பேர் சரியான பதிலை கொடுத்திருக்கிறார்கள். நல்லது. தொடர்ந்து மற்றவர்களுக்கும் இந்தப்பகுதியை அறிமுகம் செய்து, வேதத்தை வாசிக்க ஊக்குவியுங்கள்.

### வேத பகுதி

**எண்ணாகமம் : 21 முதல் 25 வரை**

1.கானானியரையும், அவர்கள் பட்டணங்களையும் சங்காரம் பண்ணின இடத்திற்கு இட்ட பெயர் என்ன ?

2.கழுதை பிலேயாமை பரியாசம் பண்ணின அதிகாரம் வசனம் குறிப்பிடுக!

3.மோவாபின் ராஜா யார்?

4.மந்திரம், குறிசொல்லுதல் பிரபலமான வசனம் - அதிகாரம்?வசனம்?

5.இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதை யாரால் நின்றது?

6.அந்நிய தேவர்களுக்கு இட்ட பலிகளை விருந்துண்பதற்கு வேதம் கொடுக்கும் பெயர் என்ன?

7.சிம்ரி கஸ்பி - இதில் இஸ்ரவேல் யார்?

8.ஊற்றுத் தண்ணீரே, பொங்கி வா - ஊற்று இருந்த இடம் எது ?

9. பாலாக் யாருடைய குமாரன் ?

10.எண்ணாகமம் 24 : 4 -யாரைக் குறித்து பிலேயாம் தீர்க்கதரிசனமாக சொல்லுகிறான்? (தெரியாவிட்டால் கேட்டாவது எழுதுங்கள் . அறிந்து கொள்ள வேண்டியது)

### கடந்த மாதம் சரியான பதில் எழுதியவர்கள்

1. கீதா தினேஷ் (பொத்தூர்).
2.சரஸ்வதி தேவராஜ் (எக்மோர்).
3.ரம்யா லிவிங்ஸ்டன் (போரூர்) .
4. மகா (வேப்பம்பட்டு ).
5.ரோஸி வினோத் (காமராஜ் நகர்).
6.பெயர் இல்லாதது (ரெட்ஹில்ஸ் மெய்யான ஒளி).
7.ரெஜினா பாண்டியன் (அம்பத்தூர்).
8.சுகந்தி (அயப்பாக்கம்).
9.டாரிஸ் பிலோமினா (ரெட்ஹில்ஸ் ).
10.சுகந்தி ஜோன்ஸ் ( திருச்சி).
11.எலிசபெத் சாலொமோன் (கன்னிகா புரம்).
12.Dr. இவான்ஜலின் ஜோன்ஸ் (சேலம்).
13.ரோஸ் மேரி (எருக்கன் சேரி).
14.எட்வினா (கோயில் பதாகை).+

பரிசு பெற்றவர் :

**கீதா தினேஷ்**

**(பொத்தூர்).**

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 28 - 6 - 2023.**